# தரம் 08 தமிழ் மொழியும் இலக்கியமும் அலகு 06

# வாழ்வதற்காக வாசி




## வாசிப்பை நேசித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்


Mr.S.Rajkumar, (B.A)
BT/BW/Kayankudah Kannaki Vid.
Batticaloa.

அல்மோரா மாவட்டச் சிறைச்சாலையில் இருந்து, ஜவகர்லால் நேரு அவர்கள், தனது மகள் இந்திரா பிரியதர்சினிக்கு, **அவளுக்கு தேவையான புத்தகங்களைப்பற்றி அறிந்து கொள்வதற்காக,** கடிதம் ஒன்றை எழுதினார்.

அதில், "நான் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில், படிக்கும்போது, பேராசிரியர்களை தனியாகச் சந்தித்து, உரையாடுவது வழக்கம். அதுபோல் நீயும், பல்கலைக்கழக பேராசிரியர் கிருபாளினியின் உதவியுடன் பல விடயங்களை அறிந்துகொண்டாய் என நான் அறிந்துள்ளேன். **இப்படியான உரையாடல் எங்கள் வளர்ச்சிக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும்.**

புத்தகம் வாசிப்பதை கடமையாக்குதல், கட்டாயப்படுத்துதல், கூடாது; ஏனெனில், **வாசிப்பு மகிழ்ச்சி தராது; வெறுப்பை உண்டாக்கும்; வாசிப்பில் ஆசை வராது"** என எழுதியதோடு, சேக்ஸ்பியர் மில்டன் முதலியோர் சிறந்த ஆங்கிலப் படைப்பாளிகள் பிளேட்டோவின் சிந்தனைகளைத் தூண்டும் கிரேக்க நாடகங்கள் , காளிதாசரின் சகுந்தலை நாடகம், டால்ஸ்டாயின் **போரும் அமைதியும்,** போன்ற நூல்கள் பற்றி விளககம் அளித்ததோடு, அவைகளை வாசித்தது பற்றியும் வினவினார்

புத்தகம் வாசிப்பதால் **அறிவு பெருகும். மன மகிழ்ச்சி அடையும். வாழ்க்கையை புரிந்து கொண்டு முறையாக வாழ்க்கை நடத்தவும் உதவும்.** என அறிவுரைகளைக் கூறியபடி அமைந்தது அக்கடிதம்.

## 01. பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இந்தக் கடிதம் எழுதப்பட்டதன் நோக்கம் யாது?
2. வாசிப்புப் பழக்கத்தை ஏன் வற்புறுத்தி ஏற்படுத்தக் கூடாது எனக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது?
3. கற்பிக்கும் ஆசிரியர்களைத் தனியே சந்தித்து, கலந்துரையாடுவது ஏன் நல்லது?
4. டால்ஸ்டாய் எழுதிய நூலின் பெயர் என்ன?
5. நூல்களை வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகள் மூன்று எழுதுக.

(5X4=20)

1 எழுவாய்

2 ஐ

3 ஆல்,ஆன்,ஒடு,ஓடு

# வேற்றுமை

வாக்கியத்தில் **பெயர்ச்சொல்லின்** இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுதல் வேற்றுமை ஆகும. இது **08 ஆகும்** என நன்னூலார் கூறுகின்றார்

## 06 ஆம் வேற்றுமை (உடைமை வேற்றுமை)

வாக்கியத்தில் பெயர்ச் சொல்லானது உடைமைப் பொருளை உணர்த்தும் வகையில் செயற்படுதல் ஆறாம் வேற்றுமை ஆகும்.

4 கு

5 இல்,இன்

**இதன் உருபு – அது, ஆது சொல்லுருபு - உடைய**

இதனை கிழமை வேற்றுமை எனவும் கூறலாம். இதில் உடைமைப் பொருளை ஒன்றை விட்டு ஒன்றை வேறுபடுத்தக் கூடியவாறு இருக்குமாயின் **பிறிதின்கிழமை** எனவும், உடைமைப் பொருளை ஒன்றை விட்டு ஒன்றை வேறுபடுத்தி நோக்கக் கூடியவாறு இல்லையெனின் **தற்கிழமை** எனவும் அழைப்பர்.

- தற்கிழமை – மாலதியின் அழகு – அழகையும் மாலதியையும் பிரிக்கமுடியாது.
- பிறிதின்கிழமை – ஜெமிலின் தந்தை – ஜெமிலையும் தந்தையையும் பிரித்து நோக்கலாம்.

6 அது,ஆது

8 விளி

7 இல்,கண்,உள்

## 02. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. புத்தகம் வாசிப்பது மகிழ்ச்சியளிக்கும். **புத்தகம்** என்பதன் ஒத்த சொல் யாது?
   1 சஞ்சிகை 2. பனுவல் 3. கட்டுரை 4. தினசரி

2. வயது ஆக ஆக விருப்பம் மாறும். **வயது** என்பதனை குறிக்கும் வேறு சொல்
   1. அகவை 2. ஆண்டு 3. முதிர்வு 4. காலம்

3. கிரேக்க நாடகங்கள் வாசிக்க எளிதாக இருக்கும். **எளிது** என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?
   1. நலிது 2. வலிமை 3. இலகு 4. கடினம்

4. டால்ஸ்டாயின் “போரும் அமைதியும்” எனும் நூல் சிறந்ததாகும். **அமைதி** என்பதன் எதிர்க்கருத்து
   1. சண்டை 2. சமாதானம் 3. ஆரவாரம் 4. குதூகலம்

5. ஒரு உறவுமுறைக் கடிதத்தின் இறுதி உறுப்பு
   1. திகதி 2. நன்றி 3. விளிப்பு 4. ஒப்பம்

6. ஆறாம் வேற்றுமைக்குரிய உருபுகள்

1. அது, ஆது  2. கு, ஐ  3. ஆல், ஆன்  4. ஒடு, ஓடு

7. ஆறாம் வேற்றுமை உணர்த்தும் பிரதான பொருள்

1. நீங்கற் பொருள்  2. உடைமைப் பொருள்  3. இடப்பொருள்  4. ஏதுப் பொருள்

8. "இராமனது தந்தை" என்பது என்ன பொருளில் வந்துள்ளது?

1. காரணப் பொருள்  2. தற்கிழமைப் பொருள்  3. பிறிதின் கிழமைப் பொருள்  4. நட்புப் பொருள்

**இடைவெளிகளை நிரப்புவதற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

9. வேற்றுமை ஏற்கும் சொல் .................. ஆகும்

1. வினைச்சொல்  2. பெயர்ச்சொல்  3. உரிச்சொல்  4. மேலுள்ள மூன்றும்

10. பெரிய மரத்தினது கிளை ஒவ்வொன்றாக உடைந்து வீழ்ந்தது. இவ்வாக்கியத்தில் வேற்றுமை உருபு ஏற்றுள்ள சொல்

1. கிளை  2. வீழ்ந்தது  3. ஒவ்வொன்று  4. மரம்

(10X2=20)

### 03 பின்வருவனவற்றை தொடர்பு படுத்துக.

| | | |
|---|---|---|
| 1. | கேம்பிரிஜ் | கிரேக்க சிந்தனையாளர் |
| 2. | சேக்ஸ்பியர் | விஸ்வபாரதி பல்கலைக்கழக பேராசிரியர் |
| 3. | பிளேட்டோ | வடமொழி நாடக ஆசிரியர், கவிஞர் |
| 4. | கிருபாளினி | இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் |
| 5. | காளிதாசர் | ஆங்கில நாடக ஆசிரியர் |

(5X2=10)

## 04. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக

1. ஜவகர்லால் நேருவின் மகள் .................. ஆவார் ( இந்திரா பிரியதர்சினி / கிருபாளினி )

2. மில்டன் என்பவர் சிறந்த ................. இருந்தார் (கிரேக்க சிந்தனையாளராக /ஆங்கிலக் கவிஞராக)

3. உறவுமுறைக் கடிதமொன்றில் ............... உறுப்புக்கள் காணப்புடும் ( ஐந்நு / ஏழு / நான்கு )

4. தன்னில் இருந்து வேறுபடுத்தக்கூடிய உரிமை கொண்ட பொருள்..............எனப்படும் (தற்கிழமை /பிறிதின் கிழமை)

5. வேற்றுமைகள் .................. என நன்னூலார் கூறுகின்றார் ( ஏழு / எட்டு / ஒன்பது )

(5X2=10)

**07. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள சொற்கள் எத்தனையாம் வேற்றுமை? என்ன பொருளில் வந்துள்ளது? என எழுதுக.**

1. **நல்லூரின்** கிழக்கு நாவற்குழி - …………ஆம் வேற்றுமை ……………………………………...பொருள்

2. **சீதையினது** அழகு கம்பரை கவர்ந்துவிட்டது - …………ஆம் வேற்றுமை ………………………..பொருள்

3. **வீரத்தில்** வீமன் சிறப்புடையவன் -…………...................ஆம் வேற்றுமை …………………………..பொருள்

4. கமால் **குமாருக்கு** நண்பன் ஆவான் -……………...........ஆம் வேற்றுமை …………………………..பொருள்

5. குகன் **உழைப்பால்** உயர்ந்தான் -…………..................ஆம் வேற்றுமை …………………………..பொருள்

(5X(2+2)=10)

**05. பின்வருவனவற்றை தற்கிழமை பிறிதின்கிழமை என வேறுபடுத்துக**

1. எனது நாடு இலங்கை......................................................................
2. பறவைகளது கூட்டம்.......................................................................
3. விபுலாநந்தரது பிறந்தநாள்.............................................................
4. வள்ளுவரது மனைவி ......................................................................
5. குழந்தைகளது புத்தி.........................................................................

(5X2=10)

## 06. பின்வருவனவற்றை சரியாயின் சரி (√ ) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் குறியீடு இடுக

1. அல்மோராச் சிறை இந்தியாவின் உத்திராஞ்சல் மானிலத்தில் உள்ளது. (  )
2. புத்தகம் வாசித்தலை கடைமையாக்க வேண்டும். (  )
3. புத்தகங்கள் வாசிப்பதால் பல தீமைளும் உணுடு. (  )
4. காளிதாசர் சகுந்தலை நாடகத்தை இயற்றினார். (  )
5. மாதவியின் அழகு என்பது ஆறாம் வேற்றுமை பிறிதின்கிழமை ஆகும். (  )

(5X2=10)

# விடைகள்

## 01

1. அவளுக்கு தேவையான புத்தகங்களைப்பற்றி அறிந்து கொள்வதற்காக,
2. வாசிப்பு மகிழ்ச்சி தராது; வெறுப்பை உண்டாக்கும்; வாசிப்பில் ஆசை வராது
3. இப்படியான உரையாடல் எங்கள் வளர்ச்சிக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும்.
4. போரும் அமைதியும்,
5. அறிவு பெருகும். மன மகிழ்ச்சி அடையும். வாழ்க்கையை புரிந்து கொண்டு முறையாக வாழ்க்கை நடத்தவும் உதவும்.

## 02

| | |
|---|---|
| 1 – 2 | 6 – 1 |
| 2 – 1 | 7 – 2 |
| 3 – 4 | 8 – 3 |
| 4 – 3 | 9 – 2 |
| 5 – 4 | 10 - 4 |

## 03

1 – 4
2 – 5
3 – 1
4 – 2
5 – 3

## 04

1. இந்திரா பிரியதர்சினி
2. ஆங்கிலக் கவிஞராக
3. ஐந்நு
4. பிறிதின் கிழமை
5. எட்டு

## 05

1. பிறிதின்கிழமை
2. தற்கிழமை
3. தற்கிழமை
4. பிறிதின்கிழமை
5. தற்கிழமை

## 06

1. √
2. ✖
3. ✖
4. √
5. ✖

## 07

1. 5ஆம், எல்லைப் பொருள்
2. 6ஆம், ஊடைமை/தற்கிழமை
3. 5ஆம், ஏதுப் பொருள்
4. 4ஆம், நட்புப் பொருள்
5. 3ஆம், காரணப் பொருள்

# நன்றி



# வணக்கம்